1982 மார்ச் 12]

ஜெயம்கொண்டம் தொகுதியில் ஆழ்குழாய் கிணறுகள் மூலம்குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 450—திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்டம் தொகுதியில் குடி தண்ணீர் வசதிக்காக எத்தனை ஆழ் குழாய்க் கிணறுகள் இதுவரை பூர்த்தியாகியிருக்கிறது ?

(ஆ) பூர்த்தியான ஆழ் குழாய்க் கிணறுகளிலிருந்து உடனடியாகப் பம்பு செட்டுகள் பொருத்தி அப்பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 33 ஆழ் துளைக் கிணறுகள்.

(ஆ) 32 ஆழ்துளைக் கிணறுகளில் இறைப்பான்கள் பொருத்தப்பட்டு மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மீதமுள்ள ஒரு ஆழ்துளைக் கிணறு உப்பு நீரானதால் வேறு ஒரு ஆழ்துளைக் கிணறு தோண்டத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரை மின்சார இரயில் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 451—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரை மின்சார இரயில்பாதை போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சென்னை கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து மயிலாப்பூர் லஸ் வரை மின்சார இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற இவ்வரசு மத்திய அரசை வற்புறுத்தியுள்ளது. இந்த இரயில் பாதையின் மொத்த நீளம் 8·45 கி. மீ. இது கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து சென்னை மத்திய சிறை வரை 2·93 கி. மீட்டருக்கு தரைமட்டத்திலும், மிகுதி